செப்டம்பர் 2004 அரசு-1 மகுடம்-3 விலை: ரூ.10/-

# ஜோதிட அரசு

64 பக்கங்களுடன்

ஜோதிட ஆன்மீக மாத இதழ்



## இல்வாழ்க்கை சிறக்கும் யோகம் யாருக்கு?

## வாலை இரசகற்பம்- அரிய மருத்துவக் கட்டுரை



## கண்ணொளி வழங்கிய கருணைமிகு சித்தர் - ஸ்ரீகுருஞானசம்பந்தர்

## 9ம் எண்ணின் மகத்துவம் - ஆசிரியர் சிறப்புக் கட்டுரை

# விவாகரத்து பெறும் ஜாதகங்கள்

ஓர் மனிதன் தனது வாழ்க்கையில் பள்ளி பருவத்தில் தனது ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களுடன் பகிர்ந்து கொள்கின்றான். வாலிப பருவத்தில் கல்லூரியிலும் வேலை பார்க்கும் இடத்திலும் நண்பர்களுடனும் மற்றவர்களுடன் தனது வாழ்க்கையை பகிர்ந்து

கொள்கின்றான் இந்த காலத்தில் தான் தனது தாய் தந்தைகளுடன் பாராமரிப்பில் வளர்கின்றனர். ஆனால் இதற்கு மேல் **திருமணம் ஆனது முதல் தனது உயிர் உள்ள வரை தனது மனைவியுடன் தனது சந்தோஷங்களையும் துக்கங்களையும் பகிர்ந்து கொள்கிறான்.**

ஓர் ஆணிற்கோ அல்லது பெண்ணிற்கோ திருமண வாழ்க்கை சிறப்பாக அமைந்தால் தான் அவன் தனது பணியிலும், தொழிலும் நல்ல கவனத்தை செலுத்தி முன்னேற்றம் காண முடியும். வயதான காலத்தில் ஓர் மகனுக்கு மனைவி செய்ய வேண்டிய காரியங்களை மனைவிதான் செய்யமுடியும் அதை தாய் செய்ய முடியாது.

திருமண பொருத்தத்தில் பத்து பொருத்தம் மட்டும் பார்ப்பது திருமண பொருத்தம் ஆகாது. பத்து பொருத்தங்களுக்கு 9,8,7 பொருத்தங்கள் இருந்தும் கணவன் மனைவி ஒற்றுமை இல்லாமல் பிரிவினை ஏற்படுகின்றது ஏன்?

பத்து பொருத்தம் என்பது திருமண பொருத்தத்திற்காக நுழைவு வாயில். இந்த பத்து பொருத்தம் என்பது கட்டிடத்திற்கு அடித்தளமே. அடித்தளமே கட்டிடம் ஆகிவிடாது.

ஒருவர் ஜாதகத்தில் 7ம் இடத்து அதிபதி வலு பெற்று நல்ல ஸ்தானங்களில் இருக்குமேயானால் திருமணப் பொருத்தம் சிறப்பாக இருக்கும் களத்திரகாரகன் சுக்கிர ஆண், பெண் இருவருக்கும் சமமான நிலையில் இருக்க வேண்டும். சுக்கிரன் செவ்வாய் சேர்க்கை இருக்குமேயானால் இருவருக்கும் சுக்கிரன் செவ்வாய்சேர்க்கை இருக்க வேண்டும்.

மேஷம் மற்றும் விருச்சிக ராசியில் சுக்கிரன் இருந்தால் காதல் திருமணம் அல்லது கலாட்டா கல்யாணமாக இருக்கும். பாபா சாம்யம் உள்ள ஜாதகத்திற்கு பாப சாம்யம் உள்ள 4சாதகம் பார்த்து சேர்க்க வேண்டும். ஆண் ஜாதகத்தினரை விட பெண்ணின் ஜாதகத்தில் பாபம் அதிகமானால் ஒற்றுமை குறைவு அல்லது பிரிவினை ஏற்படலாம். பொதுவாக பாபம் பெற்ற ஜாதகர்கள் மற்றவர்களை அடக்கி ஆளும் தன்மையை பெற்றவர்களாகவே இருப்பார்கள். ஆண் பெண் ஜாதகத்தில் 7க்குடையவன். 6ல் இருந்தால் அது விவாகரத்து பெறும் என்று கூறலாம். இல்லையெனில் அவர்கள் ஊர் உலகத்திற்கு கணவன் மனைவியாக இருப்பார்களே தவிர தாம்பத்திய உறவுகள் திருப்திகரமாக இருக்காது ஒற்றுமை குறைவாக இருக்கும்.

**"ஏழுக்குடையவன் ஆறில் அமர்ந்திட**
**கண்ட புருஷன் முறுமுறுப்புடன் தேடி வைத்து**
**கானாந்திரம் தேசாந்திரம் சென்று விடுவான்"**

என்கிறது பழம் பெரும் ஜோதிட நூல். இது அனுபத்திலும் சரியாக உள்ளது.



- மேஷ லக்கினத்திற்கு 7க்குடைய சுக்கிரன் 6 ல் நீசம் பெறுவது
- ரிஷப லக்னத்திற்கு 7க்குடைய செவ்வாய் 3ல் நீசம் பெறுவது அல்லது 6ல் கன்னியில் அமர்வது
- மேஷ லக்கனத்திற்கு 7க்குடைய சுக்கிரன் 6ல் நீசம் பெறுவது
- மிதுன லக்கினத்திற்கு 7க்குடைய குரு சிம்மத்தில் இருப்பது அல்லது 6ல் இருப்பது வக்கிரம் பெற்றும் இருப்பது நீசம் பெற்று இருப்பது
- கடக லக்கனகாரர்களுக்கு திருமண பொருத்தம் பொழுது மிகவும் கவனமாக பொருத்தம் பார்க்க வேண்டும். இவர்களுக்கு இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைவது இல்லை. காலம் கடந்த திருமணம் நல்ல பலனை அழிக்கும் சனி 7,11,12 ல் இருந்தால் இருதாரம் அமையும்.
- சிம்ம லக்கன காரர்களுக்கு 7க்குடைய சனி உச்சம் பெற்று 3ல் இருந்தால் 6ல் இருந்தால் விவகாரத்து

ஏற்படும். 2க்குடைய புதன் உச்சம் ஆட்சி பெற்று இருந்தால் தவிர்க்கலாம்.

- கன்னியா லக்கனத்திற்கு 7க்குடைய குரு 3ல் இருந்தாலும் நீசம் பெற்றாலும் 6ல் இருந்தாலும் விவாகரத்து ஏற்படும்.
- துலா லக்கனத்திற்கு 7ம் இடத்தில் எந்த கிரகங்களும் இல்லாமல் இருக்க வேண்டும். துலா லக்கனகாரர்களுக்கு 7ல் கிரகங்கள் இருக்குமேயானால் இருதாரம் அல்லது விவாகரத்து ஏற்படும்.
- விருச்சிக லக்கனகாரர்களுக்கு 7க்குரிய சுக்கிரன் நீசம் பெறுவது அல்லது 6 ல் மேஷத்தில் இருப்பது காதல் திருமணம் ஏற்பட்டு விவாகரத்து ஏற்படும்.
- தனுசு லக்கனகாரர்களுக்கு 6க்குடைய சுக்கிரன் 7ல் இருந்தால் விவாகரத்து
- மகர லக்கனகாரர்களுக்கு 7க்குடைய சந்திரன் 12ல் இருந்தால் விவாகரத்து
- கும்ப லக்கனகாரர்களுக்கு 7க்குடைய சூரியன் 8ல் மறைவு அல்லது நீசம் பெறுவது
- மீன லக்கனக்காரர்களுக்கு 3,8க்குடைய சுக்கிரன், நீசம் பெற்று 7ல் இருப்பது திருமண பொருத்தம் பார்க்கும் பொழுது மேற்கண்ட விதிகளை கண்டுப்பிடித்தால் விவாகரத்தை தவிர்க்கலாம்.



★ "ஜோதிஷமணி"

**S. சங்கரசுப்பிரமணியன், D.A., M.A.,**

24, சன்னதிதெரு,

சி.என்.கிராமம்,

திருநெல்வேலி ஜங்சன். 627 001.

போன் : 94434-86722

## தன்னம்பிக்கையும், ஊக்கமுமே நமக்கு உற்ற துணை!

இப்பிறவியில் அமையும் நன்மை தீமைகள், 'பூர்வஜென்ம பரீட்சை' எழுதியதற்குக் கிடைத்த பாரபட்சமில்லாத மதிப்பெண்களே! உழைக்காமல் தூங்குபவனுக்கும் அதிர்ஷ்டம் முதுகைத் தட்டி எழுப்புவது உண்டு என்றாலும், அதன் வரவு நிச்சயப்படாத நிலையில் செயலாற்றாத தூக்கம் சீரழித்து விடும் 'என்பதை மறந்துவிடலாகாது! விதியாய் அமைந்தது என்ன என்பதும், அதன் விளையாய் நிகழ்வது என்ன என்பதும் நமக்குப் புரியாத நிலையிலும் கூட, சிந்திப்பதும் செயலாற்றுவதும் நம்முடைய வசத்தில் இருப்பதைப் போன்ற உணர்வை இறைவன் ஏற்படுத்தியிருப்பது ஏன்? கர்ம பலனிலாவது நாம் கடைத்தேறட்டுமே என்பதற்காகத் தான்! அடிப்படையாக அமைந்த நன்மைகளும் கூட அவரவர் முயற்சிக்கும் உழைப்புக்கும் ஏற்ற அளவில் அதிகரிக்கும் என்பதான நிலையில், ஊழை முற்றிலும் புரிந்துகொள்ளாத நாம், உழைப்பைத் தான் இறைவனின் கருணையாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ஊக்கமே நமக்கு உற்ற துணையாக இருக்கவேண்டும்!